# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

(Under Section 173 BNSS)
(பா.கு.பா.ச பிரிவு 173 இன் கீழ்)

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8109786

1. District / மாவட்டம்: Virudhunagar  PS / காவல்நிலையம்: Vigilance and Anti Corruption  Year / ஆண்டு: 2025  FIR No / மு.த.அ. எண்: 02/2025  Date / நாள்: 21 04 2025

2. (i) Act சட்டம்: PC Act 1988 as Amended in 2018  Sections பிரிவுகள்: u/s 7
   (ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : / குற்ற நிகழ்வு நாள்
   Date from / நாள் முதல் : 16.04.2025 at 12.00 hrs  Date to / நாள் வரை : 21.04.2025 at 12.30 hrs
   Time Period / நேர அளவு :  Time from / நேரம் முதல் :  Time to / நேரம் வரை :
   (b) Information Received at PS. Date : / காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்  21.04.2025  Time / நேரம் : 17.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) / பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்  21.04.2025  Time / நேரம் : 17.00 hrs

4. Type of Information : Written/ Oral : / தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: / குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்  About 35 Kms / South East
   Beat Number : / முறைக் காவல் எண்  (b) Address : / முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : / குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்  திரு.சின்னத்தம்பி
   (b) Father's/ Husband's Name / தந்தை / கணவர் பெயர் : திரு.ஆசிர்வாதம்
   (c) Date / Year of Birth : / நாள் / பிறந்த ஆண்டு  08.06.1991  (d) Nationality : / நாட்டினம்  Indian  (e) Passport No. : / வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : / வழங்கப்பட்ட நாள்  Place of Issue : / வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : / தொழில்  கூலி/எலக்ட்ரீசியன்  (g) Address : / முகவரி  க.எண்.4/482, கிழக்கு காலனி தெரு, வதுவார்பட்டி கிராமம், அருப்புக்கோட்டை தாலுகா, விருதுநகர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) திரு.இப்ராஹிம், கிராம நிர்வாக அலுவலர், வதுவார்பட்டி கிராமம், அருப்புக்கோட்டை தாலுகா, விருதுநகர் மாவட்டம்.
   2) திரு.சிங்கராம், கிராம உதவியாளர், வதுவார்பட்டி கிராமம், அருப்புக்கோட்டை தாலுகா, விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   - தாமதம் இல்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

Not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : Not arise
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது.

நான் இன்று 21.04.2025 மாலை 17.00 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தாலுகா, வதுவார்பட்டி கிராமம், கதவு எண்.4/482, கிழக்கு காலனி தெருவை சேர்ந்த திரு.ஆசிர்வாதம் என்பவரின் மகன் திரு.சின்னத்தம்பி என்பவர் என் முன்பாக ஆஜராகி விபரம் சொல்லி கொடுத்த புகாரை பெற்று அதை படித்துப்பார்த்து, மேலும் அவரிடம் விபரம் கேட்டு தெரிந்து கொண்டேன். உடன் அந்த புகார் தொடர்பாக இரகசிய விசாரணை செய்ததில், எதிரிகள் மீது எதிர்மறையான குறிப்புகள் இருந்ததாலும், வாதி மீது நம்பகத்தன்மையான குறிப்புகள் இருந்ததாலும், வழக்குப்பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, தென் சரக, காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்துவிட்டு, இன்று 21.04.2025 இரவு 20.00 மணிக்கு காலம் 7-இல் கண்ட எதிரிகள்மீது விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.02/2025 சட்டப்பிரிவு 7 of the

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

A. Chinnathambi 21/4/2025 (signature) — (signature) 21.04.25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
K. RAMACHANDRAN
Name: பெயர் ADSP/V&AC/VNR(OD)
Rank: நிலை ...................... No. எண் ..........

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
22.04.25/1000 hrs.

**விருதுநகர் மாவட்ட ஊ.த.க. பிரிவு குற்ற எண்.02/2025 பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி**

Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன்படி வழக்குப்பதிவு செய்தேன். வாதி திரு.சின்னத்தம்பி அவர்களது புகார் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர்:-ஆ.சின்னத்தம்பி, வயது 33/2025, த/பெ.ஆசிர்வாதம், கதவு எண்.4/482,கிழக்கு காலனி தெரு, வதுவார்பட்டி கிராமம், அருப்புக்கோட்டை வட்டம், விருதுநகர் மாவட்டம். பெறுநர் உயர்திரு.கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, விருதுநகர். அய்யா, நான் விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தாலுகா, வதுவார்பட்டி கிராமத்தில் குடும்பத்துடன் குடியிருந்து, எலெக்ட்ரீசியன் கூலி வேலை செய்து வருகிறேன். எனது ஊரை சேர்ந்த மாரியப்பன் அவர்களின் மனைவி திருமதி.ராமு அம்மாள் அவர்களுக்கு சொந்தமான விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தாலுகா, வதுவார்பட்டி கிராமம் குடியிருப்பில் பட்டா எண்.410-ல் கண்ட பழைய நத்தம் சர்வே எண்.67/1, புதிய நத்தம் சர்வே எண்.242/12-ல் உள்ள 27 சதுர மீட்டர் அளவுள்ள காலியிடத்தை கடந்த 14.03.2025ஆம் தேதி பந்தல்குடி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.721/2025-ன் பிரகாரம் கிரையம் பெற்றேன். மேற்படி காலியிடத்திற்கு முறையாக நான்குமால் பார்த்து எல்லைக்கல் இல்லாமல் இருந்தது. ஆகையால் எனக்கு தெரிந்த எங்கள் ஊர் தலையாரி திரு.சிங்காரம் அவர்களிடம் கடந்த 02.04.2025ஆம் தேதி நான் புதிதாக வாங்கிய காலியிடத்தை நான்குமால் பார்த்து அளந்து எல்லைக்கல் ஊன்றி நடவடிக்கை எடுக்க கேட்டேன். அதற்கு அவர், வருகிற 09.04.2025ஆம் தேதி சர்வேயர் போடம்பட்டியிலுள்ள வேறு ஒருவரின் இடத்தை அளக்க வருகிறார் என்றும், அப்போது அவரையும், நம்ம வி.ஏ.ஓ.வையும் நான் கூட்டிக்கொண்டு வந்து, உன் இடத்தை காண்பித்து அளந்து கொடுக்கிறேன் என்றும் சொன்னார். அதனால் சர்வேயர், வி.ஏ.ஓ. ஆகியோர் அளந்து கொடுக்க வருவார்கள் என்று, நான் புதிதாக வாங்கிய காலியிடத்தில் கடந்த 09.04.2025ஆம் தேதியன்று காலை 08.00 மணியளவில் காத்திருந்தேன். தலையாரி திரு.சிங்காரம் அவர்கள் சொன்னதுபோல், அவர், அன்று (09.04.2025) காலை சுமார் 08.15 மணியளவில் சர்வேயர் திரு.வல்லத் மற்றும் விஏஓ திரு.இப்ராஹிம் ஆகியோருடன் வந்து, என்னுடைய காலியிடத்தை பார்த்துவிட்டு, அவர், என்னை தனியாக அழைத்து, மேற்படி காலியிடத்தை சர்வே பண்ணுவதற்கு இ-சேவை மையம் வழியாக கட்ட வேண்டிய கட்டணத்தை கட்டிவிட்டு, அதற்கான ரசீதுடன் வி.ஏ.ஓ அலுவலகத்திற்கு வந்து தன்னை பார் என்று சொன்னார். ஆகையால், கடந்த 12.04.2025 அன்று அருப்புக்கோட்டை, யூனியன் ஆபிஸிற்கு எதிரிலுள்ள இ-சேவை மையத்திற்கு சென்று ரூ.800/- தொகையை செலுத்தி ரசீது பெற்றேன். அந்த ரசீதுடன் ஒரு மனுவை தயார் செய்து அருப்புக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று, அங்கிருந்த புகார் பெட்டியில் போட்டேன். பின்னர் தலையாரி திரு.சிங்காரம் அவர்கள் சொன்னதுபோல், கடந்த 16.04.2025 மதியம் சுமார் 12.00 மணியளவில் வதுவார்பட்டியிலுள்ள VAO அலுவலகத்திற்கு சென்றேன். அங்கு தலையாரி

திரு.சிங்காரம் அவர்களும், விஏஓ திரு.இப்ராஹிம் சார் அவர்களும் இருந்தார்கள். அவர்களிடம் மேற்படி ரசீதை காண்பித்தேன். அப்போது தலையாரி திரு.சிங்காரம் என்னிடம், ரூ.5,000/- செலவாகும் என்றும், அந்த ரூ.5,000/- பணத்தை ரெடிபண்ணி கொண்டுவந்து கொடுத்தால்தான் சர்வேயரை கூட்டிவந்து உங்களுடைய காலியிடத்தை நான்குமால் பார்த்து அளந்து எல்கைக்கல் ஊன்ற நடவடிக்கை எடுப்போம், அளந்து கொடுத்ததற்கு சான்றிதழும் பெற்றுத்தருவோம் என்று கூறினார். அதற்கு நான் அவர்களிடம், இவ்வளவு பணம் தரணுமா சார் என்று கேட்டேன் அப்போது வி.ஏ.ஓ. என்னிடம் உனக்கு என்னைக்கும் லாபம் தான் இந்த ரூ.5,000/- பணத்தை பத்தி யோசிக்காத, பணம் கொடுத்தால்தான் எல்லாம் நடக்க வேண்டிய நேரத்துல நடக்கும் என்று சொன்னார். அப்போது நான் அவர்களிடம், இவ்வளவு பணம் இப்ப இல்ல சார் என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் மீண்டும் இன்று (21.04.2025) மதியம் சுமார் 12.30 மணியளவில் வதுவார்பட்டியில் உள்ள VAO அலுவலகத்திற்கு சென்று, அங்கிருந்த தலையாரி திரு.சிங்காரம் மற்றும் விஏஓ திரு.இப்ராஹிம் சார் அவர்களிடம், என்னுடைய காலியிடத்தை அளந்து கொடுப்பது சம்மந்தமாக கேட்டேன். அப்போதும் அவர்கள், நாங்கள் கேட்ட ரூ.5,000/- பணத்தை கொண்டுவந்திருக்கீங்களா என்று கேட்டார்கள் அதற்கு நான் அவர்களிடம், சார் நான் கூலி வேலை செய்துதான் பிழைப்பு நடத்திவருகிறேன் என்னால் இவ்வளவு பணம் ரெடி பண்ண முடியாது, ஏற்கனவே இந்த இடத்தை ரொம்ப கஷ்டப்பட்டுத்தான் வாங்கியிருக்கேன், அதனால பார்த்து செய்யுங்க சார் என்று சொன்னேன். அதற்கு அவர்கள் என்னிடம், ரூ.5,000/- பணத்தை ரெடிபண்ணி கொண்டுவந்து எங்களிடம் கொடுங்க என்றும், அந்த ரூ.5,000/- பணத்தை கொண்டுவந்து கொடுத்தால்தான், சர்வேயரை கூட்டிவந்து உங்க காலியிடத்தை நான்குமால் பார்த்து அளந்து கொடுப்போம் என்றும், அளந்த பிறகு சர்வேயர் வழங்கக்கூடிய சான்றிதலும் கிடைக்க ஏற்பாடு செய்வோம் என்றும் கண்டிப்பாகவும், கறாராகவும் சொல்லிவிட்டார்கள். அவர்களுக்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை, இருந்தாலும் நான் அப்போது அவர்களிடம் வேறு வழியில்லாமல் சரி என்று சொல்லிவிட்டு விட்றிற்கு வந்து விட்டேன். என்னிடம் ரூ.5,000/- பணத்தை லஞ்சமாக கேட்ட வதுவார்பட்டி வி.ஏ.ஓ. திரு.இப்ராஹிம் மற்றும் தலையாரி திரு.சிங்காரம் ஆகியோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (sd) A.Chinnathambi (21.04.2025) Sir, Received the complaint on 21.04.2025 at 17.00 hrs. The genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found bad. Found prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case is warranted. The matter is intimated to the SP/SR, V&AC, Chennai and registered a case in Viruthunagar V&AC

Cr.No.02/2025 u/s 7 of the P.C Act 1988 as amended in 2018 on 21.04.2025 at 20.00 hrs and took up for investigation. (Sd) (K.Ramachandran) 21/4/25 ADSP/V&AC/VNR(OD).

The original FIR along with original complaint is submitted to the court of the CJM cum Special Judge for P.C. Act cases, Srivilliputhur and copies submitted to the concerned officers.

21.04.25

(K.RAMACHANDRAN)
ADSP/V&AC/VNR(OD).